

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள்ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் என்.சுந்தர்ராஜ், திருப்பத்தூர் கே.முருகவேல், காரைக்குடி சண்முகம், சிவகங்கை போஸ், மானாமதுரை மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

### கழக இளைஞரணி நடத்திய

# பேச்சுப்போட்டிகளில் அறிவாயுத இளைஞர்களின் அணிவகுப்பு!

“என் உயிரினும் மேலான” என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிற கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிகள் அறிவு புரட்சியின் அடையாளமாக வரலாற்றில் இடம் பெற்று இருக்கிறது.

கழகத் தலைவர் முதல்வர் அண்ணன் தளபதி அவர்களின் ஆணையேற்று இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்பான நிர்வாகத்தின் காரணமாக இப்போட்டிகள் மாபெரும் வெற்றியை ஈட்டின .

கழகம், போட்டிகளை அறிவித்த உடனேயே அலை கடலென மாணவர்கள் விண்ணப்பிக்க தொடங்கினர். அதுவும் நகரங்களோடு போட்டி போடும் வகையில் கிராமங்களிருந்து சாமானிய குடும்பங்களைச் சேர்ந்த ஏழை எளிய மாணவர்கள் விண்ணப்பித்து இருந்தது திராவிட இயக்கத்தின் வேர் இந்த மண்ணில் ஆழ வேரோடி இருப்பதற்கான அத்தாட்சியாக அமைந்தது.

எனக்கும் நடுவராக பணிபுரியும் நல்வாய்ப்பினை மாண்பிற்குரிய தலைவரும் இளைஞரணி செயலரும் வழங்கினார்கள். அதன்படி நான், தூத்துக்குடி ,காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு (வண்டலூர்) ஆகிய மாவட்டங்களில் நடுவராக பணியாற்றினேன்.

வருங்கால தமிழ்நாட்டிற்கு அறிவாயுதங்களை தயாரிக்கும் உன்னத பணியல்லவா இது. திராவிட இயக்கத்திற்கு விதைகளை தயாரிக்கும் பாசறை நிகழ்வுகளல்லவா இப்போட்டிகள்.

கொள்கை உறுதியும், ஆற்றலும், செயல் திறனும் உடைய ஆயிரக்கணக்கான இளைஞர்களை உருவாக்குவதல்லவா பேச்சுப்போட்டிகளின் இலக்கு.

**முதற்கட்ட பேரலை**

ஆர்வத்தோடு விண்ணப்பித்தவர்கள் தங்கள் முழு திறமைகளையும் வெளிப்படுத்தினர். காலத்தால் அழியாத மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றியும். கழகத் தலைவர் திராவிட மாடல் ஆட்சியை நாடு போற்ற நடத்திக் கொண்டிருக்கிற தளபதி அவர்களின் ஆட்சி மாண்பினை பற்றியும் தமிழகத்தின் எதிர்காலம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்ளின் கைகளில் பாதுகாப்பாக இருக்கிறது என்கிற உணர்வையும் அவர்கள் வெளிப்படுத்தினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது மாணவ - மாணவியர் வைத்திருக்கிற பேரன்பை இதன் மூலம் உணர முடிந்தது. நிறைவு போட்டிகளில் கலந்து கொள்ள 913 மாணவ வீரர்களும் வீராங்கனைகளும் தேர்வு செய்யப்பட்டனர்.

மிகப்பெரும் ஆர்வத்தோடு போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் இளைஞர்களை கண்டு மகிழ்வடைந்தோம். அவர்களில் பலர் இயக்கக் குடும்பத்து பிள்ளைகள். அவர்களோடு எண்ணற்ற புதிய இளைஞர்களாவர்கள். திராவிட மாடலின் ஈர்ப்பு விசையின் வல்லமையை எங்களால் காணமுடிந்தது.

**கடலூர்**
**இள.புகழேந்தி**
கழக தேர்தல்
பணிக்குழுச் செயலாளர்



இயக்க வரலாற்றை நுணுக்கமாக படித்து வந்து பேசினார்கள். போட்டியில் வெல்ல வேண்டும் என்ற தணியாத தாகத்தோடு திசைகளை அதிரச்செய்தார்கள்.

நினைத்துப் பார்க்கிறேன் இப்படிப்பட்ட போட்டிகள் இல்லையென்றால் திராவிடத்தை பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி மேலோட்ட பார்வை தான் இளைஞர்களுக்கு மாணவ - மாணவியர்களுக்கு இருந்திருக்கும்.

போட்டிகளில் பங்கேற்ற மாணவர் மாணவியர் ஒவ்வொருவரும் 100 பேருக்கு இணையானவர்களாகவே எங்களுக்கு தெரிந்தனர்.

காரணம் இந்த வயதிலேயே அவர்களின் வாசிப்புத் திறன், வெல்லும் திராவிட வரலாற்றின் மீதான பற்று, பேச்சாற்றல் அத்தனையும் ஒருங்கே வெளிப்படுத்திய விதம் தான். அது மட்டுமன்றி இப்போட்டிகள் குறித்து ஒவ்வொருவரும் தங்கள் நண்பர்கள் குழாம்களுக்கும் உறவுகளுக்கும் சொல்லி அவர்களையும் பங்கேற்கச் செய்த மனப்பாங்கு அவர்கள் ஒவ்வொருவரையும் 100 பேராக பார்க்கச் செய்தது.

இப்போட்டிகள் மூலம் நம்முடைய மானமிகு இளைஞர் அணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

வரும் தலைமுறையின் உள்ளத்து உணர்வுகளை தட்டிக்கொடுத்து அவர்களை இயக்க வரலாறுகளை பயில வைத்து பிரச்சாரத்திறன் உள்ளவர்களாகவும் அவர்களை உருவாக்கியுள்ளார்.இது நம்முடைய தலைவர் தளபதியினுடைய உள்ளத்தை மகிழ்வடைய செய்திருக்கும்.

**சமத்துவம்**
**சமூக நீதி**
**அனைவருக்கும் அனைத்தும்**
**பெண்ணுரிமை**
**பெண் கல்வி**
**பகுத்தறிவு சிந்தனைகள்**

இவற்றையெல்லாம் சிறப்பாக உள் வாங்கி மாணவர்கள் அதனை தங்கள் உரைவீச்சில் வெளிப்படுத்தினர்.

தமிழ் மக்களின் மீதான அடிமை விலங்குகளை அறுத்தெறிந்து அவர்களுக்கான உரிமைகளை போராடி பெற்றுத் தந்து, வெளிச்சத்தை புது விடியலை உருவாக்கி தந்தது திராவிட பேரியக்கம் அந்த திராவிட பேரியக்கத்தின் அரசியல் வடிவமே திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாணவர்கள் பேசியது உயிரை சிலிர்க்க வைத்தது.. இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு நம் கழகத்தை தொட்டுப்பார்க்க யாராலும் முடியாது என்ற உறுதியான உணர்வை மாணவர்கள் தந்துள்ளனர்.

பேச்சுப்போட்டிகள் எதற்காக நடத்தப்பட்டதோ அதற்கான இலக்கை 100 க்கு 100 சதவீதம் வென்றிருக்கிறது. கொள்கை திறன் மிக்க நம் தலைவர் முதல்வர் அவர்களின் எண்ணப்படி நம் துணை முதல்வர் அவர்கள் இதனை சாதித்து காட்டியுள்ளார்.

வலுவான திராவிட கட்டுமானத்தை மென்மேலும் உறுதிப்படுத்திட துணை முதல்வர் இளைஞர்களின் நம்பிக்கை நாயகர் உதயநிதி ஸ்டாலின் இது போன்ற ஒவ்வொரு முன்னெடுப்புகளையும் எடுத்து வருகிறார்.

இதன் மூலம் திராவிட இயக்கம் அடுத்த நூற்றாண்டை நோக்கி வெற்றிகரமாக தன் பயணத்தை தொடங்கி இருக்கிறது என்று உறுதியாக குறிப்பிடுகிறேன். பாதையை வகுத்தது தலைவர் முதல்வர் தளபதி அந்தப் பாதையில் அனைவரையும் அழைத்துக் கொண்டு வீறு நடை போடுவது நம்முடைய இளம் தலைமுறைக்கு ஏற்ற திறன்மிகு துணை முதல்வர் அவர்கள்.

அவர் இந்த பேச்சுப்போட்டிகளுக்கு அளித்திருந்த தலைப்புகள் இளைஞர்களின் எண்ணங்களில் விதைகளாக ஊன்றப்பட்டுள்ளன.

தலைப்புகளை ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் இந்த உண்மை தெளிவாக புரியும்.

**தலைப்புக்கள்**

**1. என்றென்றும் பெரியார் ஏன் ?**
**2. அண்ணாவும் மாநில சுயாட்சியும்**
**3. கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி**
**4. திராவிட மாடல் நாயகர் மு க ஸ்டாலின்**
**5. தமிழ்நாட்டு குடும்பங்களில் திமுக**

இந்த தலைப்புகளில் அற்புதமாக இளைஞர்கள் பேசினார்கள். பேச்சாளர்களுக்கு உரிய பாணியில் பேசி ஆச்சரியம் அளித்தார்கள். சிலர் மனப்பாடம் செய்து வேகமாக பேசி முயன்ற வரை முயற்சித்தார்கள்.

எது எப்படியாயினும் கழகத்தின் நோக்கம் நிறைவேறியது. பேசியவர்களிடமிருந்து தன்னம்பிக்கை, விடாமுயற்சி, துணிவு, வெற்றி ஆகியன வெளிப்பட்டன.

பேசியவர்களின் உள்ளமெல்லாம் நினைவெல்லாம் பெரியார், அண்ணா, கலைஞர், திராவிட மாடல் தலைவர் அண்ணன் தளபதி ஏன் இயக்கத்திற்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிற துணை முதல்வர் ஆகியோரின் பெரும் பணிகளும் போராட்டங்களும், வெற்றிச் சாதனைகளும் நிறைந்திருந்ததை அவர்களின் உரை முழக்கத்தில் கண்டு மகிழ்ந்தோம். இதுதான் இயக்கத்தின் தலையாய இயக்கப் பணி நம் கழகம், சமுதாய அரசியல் சீர்திருத்த இயக்கம் இந்த பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட நாமக்கல் மாணவி சுதர்சனா தனி கவனம் ஈர்த்தார்.

“ கலைஞரால் தலைகுனிந்த தமிழகம் “ என்று சிலர் சொல்வதை ஏற்றுக் கொள்வதாக குறிப்பிட்ட அவர் தன் பேச்சில், “ கலைஞர் எங்களை தலைகுனிய வைத்தார். ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் எனில் உயர் சாதிக்கு மட்டும் தங்கத்தால் மூளை செய்து வைத்தானா ? மற்ற சாதிக்கெல்லாம் மண்டைக்குள் இருப்பது என்ன களிமண்ணா ? சுண்ணாம்பா ? என ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தார் கலைஞர் அவர்கள் கையில் புத்தகத்தை கொடுத்து படிப்பதற்காக தலைகுனிய வைத்தார். காலம் தந்த மகத்தான தலைவர் கலைஞரால் தான் நாங்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறோம் “ என்று பேசி வியக்க வைத்தார்.

இதுதான் திராவிட மாடல் சாதனை மகுடம் இதுதான் கலைஞர் ஸ்டைல் பதிலடியாகும் என தளபதி மகிழ்ந்து குறிப்பிட்டார்.

பேச்சு போராளிகளாக 182 பேரை உருவாக்கி இயக்கத்திற்கு கொடுத்துள்ளார் மானமிகு இளைஞர் அணி செயலாளர் இது அவர் திராவிட இயக்கத்திற்கு தந்த அறிவார்ந்த மாபெரும் நன்கொடையாகும்

பட்டித் தொட்டியெங்கும் பேசிப் பேசி வளர்ந்த இயக்கம் திமுக. அதனால் தான் நாட்டில் வறுமை, அறியாமை இருளை விரட்டியடித்து மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி ஒளியை ஏற்ற முடிந்தது. இதனை நிலை நிறுத்த திராவிட மாடல் அரசு காலத்தின் தேவை என்பதை மாணவர்கள் அனைவரும் இப்போட்டிகளின் வாயிலாக உணர்ந்து கொண்டனர்.

இப்படிப்பட்ட பேச்சுப் போட்டிகளோடு படைப்பாற்றல், எழுத்தாற்றல் ஆகியவற்றையும் இயக்க வளர்ச்சிக்கும் திராவிட பாதுகாப்புக்கும் பயன்படும் வகையில் அவற்றிற்கும் போட்டிகள் நடத்தப்பட வேண்டுமென்பது இளைஞர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. முதல்வர் தலைவர் அவர்களும் துணை முதல்வர் அவர்களும் மாணவர்கள் இளைஞர்களின் நலன் முன்னேற்றத்திற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்

காலம் உள்ளளவும் திராவிட இயக்க வரலாறாக மாறும். இதுவே இயக்கத்தின் இயக்கம்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை வி.தேவதாசன்
### நவம்பர் 5 (2019)



இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, பின்னர் கழகம் துவக்கப்பட்டபோது, அதில் இணைத்துக் கொண்டதோடு, 1951–ல் மும்பையில் குடியேறி, அம்மாநில கழக முன்னணித் தோழர்களுடன் இணைந்து பணியாற்றியவர்.

முதன்முதலாக, தான் வசித்து வந்த பாண்டூப் பகுதியில் கிளைக் கழகத்தை துவக்கி, அதன் செயலாளராக பணியாற்ற தொடங்கி, மும்பை புறநகர் மாநிலக் கழகத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தார்.

மும்பையில் திருவள்ளுவர் மன்றம் தொடங்கி, அதன் மூலம் தமிழ் வளர பாடுபட்டதோடு, திருவள்ளுவர் சிலையினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களைக் கொண்டு திறந்து வைத்ததோடு, கலைஞரின் ‘குறளோவியத்தை’ இந்தி மொழியாக்கம் செய்து வெளியிட்டார்.

2018ஆம் ஆண்டு நடந்த முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் ‘பெரியார் விருது’ பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சென்னை விமான நிலையத்தில் சேட்டிலைட் போனுடன் வந்த அமெரிக்க பயணி! போலீசார் தீவிர விசாரணை!

மீனம்பாக்கம், நவ. 5 –

சென்னை விமான நிலையத்திற்கு தடை செய்யப்பட்ட சேட்டிலைட் போனுடன் வந்த அமெரிக்க பயணியை, பாதுகாப்பு அதிகாரிகள் பிடித்து, போலீசில் ஒப்படைத்தனர். சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நள்ளிரவு 11.50 மணிக்கு, சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் புறப்பட தயாராகி கொண்டு இருந்தது. அந்த விமானத்தில் பயணம் செய்ய வந்த பயணிகளின் உடமைகளை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் பரிசோதித்தனர். அப்போது அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டேவிட் (55) என்ற பயணி, சென்னையில் இருந்து சிங்கப்பூர் செல்வதற்காக வந்திருந்தார். அவருடைய உடமைகளை பாதுகாப்பு அதிகாரிகள் பரிசோதித்த போது, அவர் சேட்டிலைட் போன் ஒன்றை வைத்திருந்ததை கண்டுபிடித்தனர்.

இந்தியாவில் பாதுகாப்பு காரணங்களுக்காக சேட்டிலைட் போன் உபயோகிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு பயணிகள் சேட்டிலைட் போன் எடுத்து வந்தால், பாதுகாப்பு அதிகாரிகள் அதை வாங்கி வைத்துக் கொண்டு, ரசீது கொடுத்து விடுவார்கள். அதன் பின்பு அந்த பயணி இந்தியாவில் இருந்து திரும்பி செல்லும் போது, அந்த போனை திருப்பிக் கொடுப்பது வழக்கமாக உள்ளது. இதனால் இந்த அமெரிக்க பயணி, தடையை மீறி சேட்டிலைட் போன் வைத்திருந்ததால், பாதுகாப்பு அதிகாரிகள் அவரை விமானத்தில் பயணம் செய்ய அனுமதிக்கவில்லை. அவரிடம் நடத்திய விசாரணையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு அமெரிக்காவில் இருந்து டெல்லிக்கு விமானத்தில் வந்து, அங்கிருந்து விமானத்தில் அந்தமானுக்கு சுற்றுலா பயணியாக வந்ததாகவும், இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில், அந்தமானிலிருந்து சென்னைக்கு வந்துவிட்டு, இப்போது சிங்கப்பூர் புறப்பட்டு செல்வதாகவும், அமெரிக்காவில் இருந்து வரும்போது இந்த சேட்டிலைட் போனை எடுத்து வந்தேன்.

அப்போது எந்த விமான நிலையத்திலும் யாரும் தடுக்கவில்லை. எங்களுடைய நாட்டில் சேட்டிலைட் போனுக்கு எந்த தடையும் இல்லை. எனவே நான் எடுத்து வந்தேன் என்று அவர் கூறியுள்ளார்.ஆனால் சென்னை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள், அமெரிக்க பயணியின் விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய சிங்கப்பூர் பயணத்தை ரத்து செய்தனர். அதோடு அவர் வைத்திருந்த சேட்டிலைட் போனையும் பறிமுதல் செய்தனர். அதன் பின்பு அமெரிக்க பயணி டேவிட்டையும் அவரிடம் இருந்து பறிமுதல் செய்த சேட்டிலைட் போனையும், பாதுகாப்பு அதிகாரிகள், சென்னை விமான நிலைய போலீசில் ஒப்படைத்துள்ளனர். போலீசார் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்து, அமெரிக்கா பயணியிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், சென்னையில் உள்ள அமெரிக்க தூதரக அலுவலகத்துக்கும் தகவல் தெரியப்படுத்தியுள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு. சுலைமான்
### நவம்பர் 5 (1983)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கோவை மாவட்டக் கழக பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

நெருக்கடி காலத்தில் மிசா சட்டம் அமல்படுத்தப்பட்ட போதும், தைரியமாக முரசொலி முகவராக பணியாற்றியவர்.

கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராக பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்

# கழகச் செயலாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, நவ.5-

கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சட்டமன்ற தேர்தல் பணிகள்தொடர்பாகதொகுதி பார்வையாளர்களுடன் ஆலோசனைக்கூட்டத்தில்அறிவுறுத்தியபடி கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனைக்கூட்டம்மாவட்டச் செயலாளர், மேயர் ரெ. மகேஷ்தலைமையில்மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில்நடைபெற்றது.கூட்டத்தில் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறியாளர்அணிஅமைப்பாளர் எஸ்.ஆனந்த், கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர்தூத்துக்குடி தெற்கு மாவட்டமீனவர்அணிஅமைப்பாளர்ரீதர்ரொட்ரிகோ,குளச்சல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்தூத்துக்குடி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வி.பி.செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டுBLA-2சரிபார்ப்புமற்றும் திருத்த பணிகள் மேற்கொள்வதுதொடர்பாகநிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார்கள். கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் கலந்துகொண்டனர்கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டது.

கழக மாநில இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணைமுதலமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 27 தினத்தை இளைஞர்களின் எழுச்சி நாளாக கொண்டாடுவது எனவும், மேலும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்துபகுதிகளிலும் இனிப்புகள் வழங்கிடவும், ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும், ஆதரவற்றோர்க்குஅறுசுவைஉணவு அளித்திடவும், ஏழை பள்ளி மாணவ - மாணவியருக்கு இலவசநோட்டுபுத்தகங்கள்வழங்கிடவும், இலவச மருத்துவ முகாம், இரத்ததான முகாம், மரக்கன்றுநடுதல்,மேலும்நல்ல பல நலத்திட்ட உதவிகளை செய்திட வேண்டும் என இக்கூட்டம்கேட்டுக்கொள்கிறது. மேலும்,திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்று வரும் சாதனைகளை விளக்கி பொதுக் கூட்டங்கள், தெருமுனை கூட்டங்கள்நடத்திபிறந்தநாள் விழாவினை மிகவும் சிறப்பாக நடத்திட வேண்டும் எனவும் இக்கூட்டம்கேட்டுக்கொள்கிறது.

2026ல் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் வரலாற்று இயக்கத்தின் கழக தலைவர்தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்த 200 என்ற இலக்கை அடைய சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கான பணிகளை தொடங்கிட கழக தலைவர்தமிழ்நாடுமுதலமைச்சர்அவர்களின்அறிவுறுத்தலின் படி “சட்டமன்ற தொகுதி பார்வையாளர்களை”நியமனம் செய்துள்ளார்கள். அதன்படி நாகர்கோ வில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட பொறியாளர்அணிஅமைப்பாளர் எஸ்.ஆனந்த், கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி பார்வையாளர்தூத்துக்குடி தெற்கு மாவட்டமீனவர்அணிஅமைப்பாளர்ரீதர்ரொட்ரிகோ,குளச்சல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்தூத்துக்குடி தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வி.பி.செல்வகுமார் ஆகியோர்நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும்தொகுதி பார்வையாளர்களுக்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் மற்றும் கிளை கழக செயலாளர்கள் முழுஒத்துழைப்புகொடுத்திட வேண்டும்எனவும்,2026சட்டமன்றதேர்தலில்200-க்கும்அதிகமான இடங்களில் கழகம் வெற்றிபெற்றுமீண்டும்ஆட்சி பொறுப்பு ஏற்கும் வகையில் கன்னியாகுமரிகிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாகர்கோவில், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில்வெற்றிபெறஇன்றே களப்பணியாற்றிட வேண்டும் எனவும், கழகதலைவர் அவர்களின் நல்லாட்சியில் நடைபெறும் சீர்மிகு திட்டங்களை ஒவ்வொரு இல்லந்தோறும் கொண்டு செல்ல வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

01.01.2025ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதியன்று 18 வயது பூர்த்தியடையக் கூடிய புதிய வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு இந்திய தேர்தல் ஆணையம்வரைவுவாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளது. மேலும்வாக்காளர்களை வாக்காளர்பட்டியலில்பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், தொகுதி/முகவரி மாற்றம் மற்றும் ஆதார் எண்ணை வாக்காளர் அட்டையுடன் இணைப்பது தொடர்பாக 28.11.2024 வரை கோரிக்கை மற்றும் ஆட்சேபனைகளுக்கான படிவங்களை 6, 6A. 6B. 7. 8 ஆகிய படிவங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம்.

மேலும் தங்களது பகுதியில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகளில் 16.11.2024 சனி, 17.11.2024 ஞாயிறு மற்றும் 23.11.2024 சனி, 24.11.2024 ஞாயிறு ஆகிய நாட்களில் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும்சிறப்புமுகாம் நடைபெறஉள்ளது.இந்தபணிகளில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து கழக சார்பு அணிகளின்அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள்,வாக்குச்சாவடிநிலை முகவர்கள், வாக்குச் சாவடி நிலை உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள்என அனைவரும்தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.